உ

குருபரன் றுணை.

# திருக்குறள்

அதிகாரச் சாரமாகிய

## நன்னெறித் தாலாட்டு.



இது

யாழ்ப்பாணம் வல்லை

சோதிடரும், வைத்தியருமாகிய

வ. ஞா. கணேசபண்டிதர்

அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1919.

REGISTERED COPY RIGHT.

மறைமலையடிக[ள்]
MARAIMALA[I]
LIBRA[RY]
MADRA[S]
சென்னை

குருபரனருளே.

# திருக்குறள்

அதிகாரச் சாரமாகிய

## நன்னெறித் தாலாட்டு.

இது

யாழ்ப்பாணம் வல்வை

சோதிடரும், வைத்தியருமாகிய

வ. ஞா. கணேசபண்டிதர்

அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை

R. அரியநாயகம் பிள்ளை

அவர்களால்

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1919.

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்.

**சென்னை தி. சபாபதி பிள்ளையவர்கள்**
**இயற்றியது.**

வெண்பா.

திருக்குறளின் மெய்ப்பொருளைத் தேர்ந்தறிவார் கற்றோர்
கருத்தையறி யாரெல்லாங் காண—பொருத்தமுடன்
செப்பினான் றாலாட்டாய்த் தேர்ந்த கணேசனெனும்
ஒப்பில்லாப் பண்டிதன்மெய் யோர்ந்து.

---

திருநெல்வேலிப்பேட்டை சைவசமய சன்மார்க்க சங்கத்தில் அமைச்சராயிருந்தவரும், கொழும்பிலுள்ள இலங்கைச்சைவ பரிபாலன சபையில் ஆசிரியராயிருந்தவரும், தமிழ் வல்லாருமாகிய சைவத்திருவாளர்

**த. ஆறுமுகநயினார் பிள்ளை அவர்களால்**
இயற்றியவை.

உலகுபுகழ் தமிழ்நாட்டி லீழமெனப் பெயரினி
    ருயர்யாழ்ப் பாணத்
திலகுவல்வைப் பதியின்கண் கலையுணர்ச்சி யிறையுணர்ச்சி
    யிரண்டும் வல்ல
புலமையொடு வயித்தியமுஞ் சோதிடமும் அமைந்தெழுந்து
    புவியில் யார்க்கும்
நலனுறநல் லொளிசெயுமோர் தவன்கணேச பண்டிதனும்
    நாமன் மாதோ,

முதுதமிழ்நாட் டொழுக்கத்தை வழக்கத்திற் கொண்டுவர
    முனைந்து நல்ல
புதுமையதாத் திருக்குறளை யாய்ந்தெடுத்துத் தாலாட்டாப்
    புனைந்து தந்தான்
அதுகொடுநல் லறத்தாய்மார் மக்களைத்தா லாட்டிவரின்
    அதனால் யார்க்கும்
மதுமலர்நேர் வாய்மணக்கு மறிவோங்கும் ஒழுக்கமிகும்
    உண்மை யாமே.

மதுரை மேலமாசிவீதி வித்வான்

**மகா-ா-ா-ஸ்ரீ மு. திருமலைமுத்துப்பிள்ளை அவர்கள்**

இயற்றியவை

வெண்பா.

தேவாகுறட் சாரந் திரட்டி யெளிதாக
ஆவலொடு நன்னெறித்தா லாட்டாக்கிப்—பூவின்
கணேசற் குணரெல்லாங் காதலிக்கத் தந்தான்
கணேசபண்டி தன்னெனு மகான்.

அன்னவன்யா ரென்றா லழகியயாழ்ப் பாணவல்லை
நன்னகரில் வாழ்வானு ஞானபண்டி—தன்னுடைய
புத்திரனுஞ் சோதிடந்தேர் புண்ணியனுஞ் சித்தரொத்த
வைத்தியனு மான வரன்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தங்கத்தினரும்,
சௌராஷ்டிரஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,
அற்புதக்கணையாழி, நீதிசாரத்திரட்டுமுதலியபன்னூலாசிரியரும்
பாண்டியநேசன் பத்திராதிபருமான

**P. சிதம்பரபுன்னைவனநாதமுதலியார் அவர்கள்**

இயற்றியது.

---

கட்டளைக் கலித்துறை.

சீர்தந்த முப்பாற் கடலைக் கடைந்து திரட்டிநரர்க்
கேர்தந்த நன்னெறித் தாலாட் டமுதம் இனிதளித்தான்;
பேர்தந்த வைத்தியம் சோதிடம் வல்லான், பிறங்குவல்லைப்
பகர்தந்த ஆசான்; அருளார் கணேசநற் பண்டிதனே.

குருபரன்றுணை.

# திருக்குறள் அதிகாரச்
சாரமாகிய
# நன்னெறித் தாலாட்டு.

காப்பு - வெண்பா.

உலகுக் குறளியென வோதுபொரு ளெங்கும்
நலமுறமுப் பாலாய் நவிற்றி—நிலமுற்றும்
கொண்டபுகழ்த் தேவரடி கூறுமுயர் சித்திமுத்தி
கண்டபரன் றாளுமெமக்குக் காப்பு.

## தாலாட்டு.

ஆராரோ இவ்வுலகுக் காதியா ரென்றுளத்தில்
தேரார்க ளுண்மையைநான் செப்பக்கேள் கண்மணியே. (1)

## பாயிரம்.

1 கடவுள் வாழ்த்து.

அகரமெழுத் திற்கெல்லா மாதியாய் நிற்பதுபோல்
சகத்திற்காம் ஆதிபெற்றோர் சத்திசிவங் கண்மணியே. (2)

கண்ணுமென் கண்மணியாய் கண்மணியி னுள்ளொளியாம்
விண்ணுய் மதியாய் விளங்குபரன் கண்மணியே. (3)

2 வான்சிறப்பு.

ஆகார மானவைக ளத்தனையு முண்டாக்கி
ஆகார மாயுலகுக் காவதும்வான் கண்மணியே. (4)

3 நீத்தார் பெருமை.

துறந்திற வாதிருக்கும் தூயோர் பெருமைசொலின்
பிறந்திறந் தாரையெண்ணிப் பேசுவதற் றுங்கிளியே. (5)

4 அறன்வலியுறுத்தல்.

ஈட்டுபொரு ளின்பம் இனியமக்க ளாயுமுத்தி
கூட்டவல்ல தாகுமறன் கூறவன்கேள் கண்மணியே. (6)

பொருளின்ப மாயுள் புகழ்புதல்வர் முதலெல்லாம்
தருமனமவாக் குச்செயலே சாற்றுமற னாங்கிளியே. (7)

மனத்துக்கண் மாசிலனும் மாண்பே யறவறமாம்
இனத்தொழுக்கம் நல்லிசை யில்லறமாங் கண்மணியே. (8)

---

## இல்லறவியல்.

### 5 இல்வாழ்க்கை.

உண்டிவெக்கு மில்வாழ்க்கை யோம்பல் முதன்மையென
கண்டுசொன் ஞர்பெரியோர் கற்றறிவாய் கண்மணியே. (9)

இல்வாழ்வே மாநதர்க் கினிதாம் பொருளின்றேல்
நல்வாழ்க்கை யேதுறவு நாடுவர்ப் கண்மணியே. (10)

### 6 வாழ்க்கைத் துணைநலம்.

உற்றார்பெற் றருடனே யூர்புகழ வாழ்கணவன்
சொற்றவறாள் வாழ்க்கைத் துணையாகுங் கண்மணியே. (11)

தற்காத்துக் கொண்டவனைத் தான்பேணி யூர்புகழுஞ்
சொற்காத்தில் வேலைகளிற் சோர்விலாள் பெண்கிளியே. (12)

நாணமட மச்சம் நவில்பயிர்ப்பு நன்னிறையும்
பேணுதலே பெண்மைப் பெருங்குணமாங் கண்மணியே. (13)

### 7 புதல்வரைப்பெறுதல்.

ஊக்க மறிவுகல்வி யொட்பமிகு நற்புதல்வர்
ஆக்கமென்ப பெற்றோர்க் கணிகலனு மாங்கிளியே. (14)

தந்தைமகற் காற்றுநன்றி சால்புடைய நைக்கையின்பு
மைந்தன்பெற் றோர்ப்பேணி வாழுவிருக் கோங்கிளியே. (15)

### 8 அன்புடைமை.

எல்லா ரிடத்துமன்பா யெய்தலே யில்லறமாம
பொல்லாரை நீக்கிப் புகழ்பெறுவாய் கண்மணியே. (16)

அன்பிலா ரெல்லாம் அவர்க்கே உரியவராம்
அன்புளா ரென்பும் அனைவருக்கு மாங்கிளியே. (17)

### 9 விருந்தோம்பல்.

இல்லா வறுமையினும் இல்லிடத்தேய் நல்விருந்தை
ஒல்லாவென் றோம்பல் ஓங்குசெல்வ மாங்கிளியே. (18)

10 இனியவைகூறல்.

இன்சொல்லே யார்க்கும் இனிதாங் கடுமொழியும்
அன்புடையார் கூறில் அறுவுமின்றி தாங்கிளியே. (19)

இனிய மொழியிருக்க இன்னாத சொல்லல்
கனியையிட்டுக் காயருந்துங் காரியமாங் கண்மணியே. (20)

11 செய்ந்நன்றியறிதல்

நன்றிமற வாதொழுகல் நன்று மதன்பெருமை
துன்றுசமயந் தெரிந்து தூயவறி கண்மணியே. (21)

காலத்திற் செய்தநன்றி காசளவே யானாலும்
ஞாலஞ்செய் நன்றியினும் நன்மைபெரி தாங்கிளியே. (22)

12 நடுவுநிலைமை.

நடுவுநிலை யாரிடத்தும் நன்றாம் அதனால்
கெடுதியுறாச் செல்வம் கிளைக்குமாங் கண்மணியே. (23)

13 அடக்கமுடைமை.

திரிகரணம் தீநெறியிற் செல்லா தடக்குதலும்
பெரியோர்ப் பணிதலுமே பேரின்ப மாங்கிளியே. (24)

14 ஒழுக்கமுடைமை.

நல்லொழுக்க மீகைபொறை நாணுடையார் மேல்குலமாம்
புல்லொழுக்க முள்ளார் புலையராங் கண்மணியே. (25)

15 பிறனில்விழையாமை.

தன்மனையை வேறொருவன் சாரவிரும் பான்பிறனின்
நன்மனையை வெஃகல் நடுவோசொல் பைங்கிளியே. (26)

16 பொறையுடைமை.

பொறுத்தலே நன்றாம் புகழ்வருமேற் பொல்லாரை
ஒறுத்தலுநன் றாமதனை உய்த்துணர்ந்து செய்கிளியே. (27)

17 அழுக்காறாமை.

சேர்ந்ததனைத் தீக்கின்ற தீபோற் பொறாமைதனைச்
சார்ந்தவரைத் தீக்குமதைத் தள்ளிவாழ் கண்மணியே. (28)

### 18 வெஃகாமை.

அஃகாதுன் செல்வம் அயலான் பொருடனைநீ
வெஃகா திருப்பையெனின் மேன்மையுமாங் கண்மணியே. (29)

### 19 புறங்கூறாமை.

பிறன்பழியைப் பின்கூறும் பேதைமைஞா லந்தனிலே
அறம்பொருளின் பங்கள் அடைவார்க்கின் றுங்கிளியே. (30)

### 20 பயனில சொல்லாமை.

பயனுள்ள சொற்களையே பார்த்துநீ சொல்வதல்லால்
பயனில்லாச் சொற்கள் பகராதே கண்மணியே. (31)

### 21 தீவினையச்சம்.

தீவினைக ளானவெல்லாம் தீதே பயப்பனவாம்
தீவினைசெய் யாவாழ்வே தேவருக்கெழிய பாங்கிளியே (32)

### 22 ஒப்புரவறிதல்.

ஊருணிபோ லும்மருந்தா யுண்பழமும் போல்யார்க்கும்
சேருந் துயர்தீர்த்தல் செல்வர்க் கொளிகிளியே. (33)

பெற்றார் மனைமார்பார்ப் பேணிச் சகோதரரை
உற்றார்மற் றோர்க்குதவல் ஒப்புரவாங் கண்மணியே. (34)

### 23 ஈகை.

வறியார்க்கொன் றீதலே மாண்பறனும் மற்றவெல்லாம்
குறியெதிர்ப்பை நாடிக் கொடுப்பனவாங் கண்மணியே. (35)

### 24 புகழ்

இல்லறங்க ளாற்புகழை எய்தினோர் மேனுலகில்
பல்லோர் தொழுங்கடவுட் பாகமுறு வார்கிளியே. (36)

இல்லறவியல் முற்றிற்று.

---

## துறவறவியல். விரதவகை

### 25 அருளுடைமை.

எல்லா வுயிர்க்கும் இரக்கமுள ராயிருத்தல்
சொல்வார்கள் முத்திக் குறையெனவே கண்மணியே. (37)

### 26 புலால் மறுத்தல்.

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாங்குமட வூனைநச்சித்
தின்னா விரக்கமிலாத் தீவினையாங் கண்மணியே. (38)

ஊன்புசிக்கும் வேங்கைக் குறுங்குணத்தைப் போல்விலங்கின்
ஊன்புசிப்பார்க் குத்தகுகண் ணொன்றுமரு ளில்கிளியே. (39)

ஊனின் குணமே உடம்புக்கா மவ்வுடம்பு
பூணுங் குணமுயிர்க்காம் பண்புலால் நீக்குகண்ணே. (40)

ஈண்டுத்தவம் கூறிய அதிகாரம் முறைபிறழக் கோக்கப்பட்டதாய் காணப்பட்டதால் முறைப்படி துறவின்பின் வைக்கப்பட்டது.

அஃதங்ஙனமாதலை 391-ம் திருக்குறளுரையில் (நிலையாமையுணர்ந்து) "ஆறாதுயிர்த்தவத்தான்மெய்யுணர்ந்து அவாவறுத்தலின் வழுவாமை" என்பதனானறிக.

### 27 கூடா வொழுக்கம்.

தவவேடத் தான்மறைந்து தன்மனங்கா மத்தழுங்கல்
புலியிற் பசுப்பித்தோல் போர்த்துலைபோ லாங்கிளியே. (41)

### 28 கள்ளாமை.

உடல்பொரு ளாவிக் குறுங்கேடு செய்களவை
விடல்வேண்டும் விட்டாக்கால் மேலின்ப மாங்கிளியே. (42)

### 29 வாய்மை.

வாய்மை யெனப்படுதல் மன்னுயிர்க்குந் தன்னுயிர்க்கும்
தீமையிலாச் சொலலை தெரிந்துசொல்வ தாங்கிளியே. (43)

### 30 வெகுளாமை.

சேர்ந்தாரைக் கொல்லும் சினத்தைவிடு செல்லிடத்தும்
ஓர்ந்துபார்த் துள்ளடக்கல் உத்தமமாங் கண்மணியே. (44)

### 31 இன்னாசெய்யாமை.

முற்பகலி லேபிறர்க்கு முட்டுதுன்ப மெல்லாம்நீ
பிற்பகலி லேயுனக்கே பேர்ந்துவருங் கண்மணியே. (45)

### 32 கொல்லாமை.

கொல்லான் புலாலையுண்ணாக் கோதிறவத் தானையுயிர்
எல்லாந் தொழுதுநின்று ஏத்துமே கண்மணியே. (46)

புலைகொலைகட் காமம் புகல்கோபம விட்டொழுகல்
அலையில் துறவறமாம் ஆய்ந்தறிவாய் கண்மணியே. (47)

தன்னுயிரைக் கொல்லா தவத்தோர்க ளிப்புவியில்
என்னுறினும் சாகா திருப்பார்கள் கண்மணியே. (48)

விரதவகை முற்றிற்று

---

## இனி அவற்றின் பயனாகிய ஞானங்கூறுவதும்

### 33 நிலையாமை.

பொருளின்ப மாக்கை புனற்குமிழி போனிலையா
அருளா லளவறிந்தே ஆசையொழி கண்மணியே (49)

### 34 துறவு.

உடல்பொரு ளின்பமெலாம வனங்குயிர்க்குப பந்தனமாம்
விடல்வேண்டும அந்துறவால் மெய்த்தவமாங் கண்மணியே (50)

### 35 தவம்.

தவமாவது மனத்தை பொறிவழி செல்லாதடக்கல்
(என்றது அட்டாங்க யோகப்பகுதியை)

உற்றபசி நோய்பொறுத்தல் ஊறுயிர்க்குச் செய்யாமை
அற்றே தவத்தினுரு வாகுமாங் கண்மணியே. (51)

உண்டி சுருக்கல் உயிரிறவா மற்காத்தல்
மண்டு தவநெறியின் மாட்சிமையாங் கண்மணியே. (52)

மனமொன்றும் பற்றுத மாண்பாம யோகத்தவத்தால்
சினமொன்றும் காலற் செயித்தலுமாங் கண்மணியே. (53)

### 36 மெய்யுணர்தல்.

சிவயோக மாந்தவத்தால் சிற்பரத்தைக் கூடலுமாம்
பவம்நீங்கும் மெய்யுணர்வாம் பார்த்தறிவாய் பைங்கிளியே. (54)

என்றுமுள மெய்ப்பொருளாம் ஏகபரங் கண்டதனோ
டொன்றிநிற்கும் முத்தர் உலகடையார் கண்மணியே. (55)

அனந்தனுட னேநினைப்பு மற்றநிலை கண்டால்
மனநதுடிக்கா மெய்ஞ்ஞானம் வாய்த்ததுகாண் கண்மணியே. 56

### 37 அவாவறுத்தல்.

பிறவிக்கு வித்தாகும் பேரவா வைத்தடிந்தால்
துறவிக்கு மேல்வீடு சொந்தமாங் கண்மணியே. (57)

ஆரா வியற்கை யவாவறுப்பி னங்கதுவே
பேரா வியற்கைப் பெருவீடாங் கண்மணியே. (58)

பற்று மயக்கமவா பாசமெனச் சொலவதெலாம்
உற்ற வொருபொருட்சொல் லோர்ந்தறிவாய் கண்மணியே. (59)

38 ஊழ்.

ஆக்கி யளித்தழித்தே யனைத்துயிர்க்கு மின்பதுன்பம்
போக்குமுதற் றெய்வம் பொருந்தூழாங் கண்மணியே. (60)

துறவறவியல் முற்றிற்று.

---

## பொருட்பால்

### அரசியல்

39 இறைமாட்சி

அஞ்சாமை யீகை அறிவூக்க மாண்மைகல்வி
எஞ்சாமை செங்கோல் இறைமாட்சி யாங்கிளியே. (61)

காண்டற் கெளியன் கடுஞ்சொலிலன் சொற்கேட்கும்
மாண்டபொறை நீதியளி மன்னர்க் கொளிகிளியே. (62)

அறிவுநிறை யோர்படையே ஆகுங் கடைப்பிடியென்
றறுநாற் குணமாண்மை உற்றமன்னர்க் காங்கிளியே. (63)

40 கல்வி

சாதிசம யந்தொழிற்காந் தக்ககல்வி யத்தனையும்
ஓதி யுணர்ந்துகற்றே ஓம்பல் முறை கிளியே. (64)

என்று மழி யாதசெல்வம் எல்லார்க்கு மேற்றகல்வி
ஒன்றுமே யல்லாதிங் கொன்றுமில்லை ஓவியமே. (65)

41 கல்லாமை

கல்லார் விலங்கினொடு கண்ணில்லார் தம்மையொப்பா
எல்லாப் பயனுமிக எய்துவர்கற் றோர்கிளியே. (66)

42 கேள்வி

கற்றிலனே யாயினுங் கற்றோர்வாய்க் கேட்டவர்கள்
சொற்றநெறி நிற்றல் துயர்தீர்க்குங் கண்மணியே. (67)

43 அறிவுடைமை.

கற்றனவுங் கேட்டனவும் கல்லா தனவுமினி
முற்றுவன வும்மறிதல் மூதறிவாங் கண்மணியே. (68)

மறைமலையடிகள் MAD.

### 44 குற்றங்கடிதல்.

சிறுமைமதம் லோபம் சினமுவகை தீமானம்
அறுவகையாங் குற்றம் அறிந்துவிடல் கண்மணியே. (69)

### 45 பெரியாரைத்துணைக்கோடல்.

செல்வ மறிவுகல்வி சீராற்ற லாண்மைகளால
வல்லபெரி யார்துணையை வாயறிந்து கொள்கிளியே. (70)

### 46 சிற்றினஞ்சேராமை.

செல்வ மறிவுகல்வி சீராற்ற லன்புபொறை
நல்லொழுக்க மில்லாரை நாடாதே கண்மணியே. (71)

### 47 தெரிந்து செயல்வகை.

ஆக்கமுங் கேடு மளவறிந்து சீர்தூக்கி
ஆக்கமிகு நல்வினையை ஆய்ந்தெண்ணிச் செய்கிளியே. (72)

### 48 வலியறிதல்

உற்றவினை யின்வலியு முன்வலிமாற் றான்வலியும்
சுற்றத்துணைவலியுந் தூக்கியறி கண்மணியே. (73)

### 49 காலமறிதல்.

பகற்பொழுதிற் காக்கை பருங்கூ கையைவெலல்போல்
இகல்வெலற்காங் காலவழி யெண்ணியறி கண்மணியே. (74)
சாதகத்தால் யோகதிசை தந்தபுத்தி சித்திரங்கள்
ஓதுகின்ற கோசரமும் உய்த்துணர்வாய் கண்மணியே. (75)
தனக்குவலி தாங்காலம் தக்கோராற் பார்த்தறிந்து
வினைக்கெழுவார்க் கெத்தொழிலும் வெற்றியாங் கண்மணியே.()

### 50 இடனறிதல்.

கப்பனிலத் தோடா கடலினிற்றே ரோடாதால்
அப்படிப்போ லுன்வினைக்கு ஆகுமிடங் காண்கிளியே. (77)

### 51 தெரிந்து தெளிதல்.

குற்றமொன்று மில்லார் குவலயத்தி லின்மையினால்
குற்றங் குறைந்துகுணங் கூடினரைக் கொள்கிளியே. (78)
குற்றங் குணந்தெரியக் கூறுமுறை கல்லவர்செய்
யுற்ற கருமமன்றி ஒன்றுமில்லை ஒவியமே. (79)
பெருமை சிறுமைகளைப் பேசுமுறை கல்லவர்செய்
கருமமே யன்றியில்லை கண்டறிந்து கொள்கிளியே. (80)

52 தெரிந்து வினையாடல்.

அன்பறிவு தேற்ற மவாவின்மை யாற்றலினை
நன்குடையா னைவினைக்கு நாட்டலாங் கண்மணியே. (81)
நன்மையுடன் றீமையையும் நாடிநன்மை மிக்காரை
சொன்ன வினைமுடிக்கத் தூண்டலாங் கண்மணியே. (82)

53 சுற்றந்தழால்.

சுற்றமெலா முன்னையன்பாய்ச் சூழ்ந்திருக்க வாழ்தறனம்
பெற்றதனாற் பெற்றபலன் பேதையர்க்கின் றுங்கிளியே. (83)
இன்சொல்மூத் தோர்ப்பணிதல் ஈகைபொறை நாணுடையான்
தன்கிளையெ லாங்கூடித் தாங்கவிருப் பான்கிளியே. (84)

54 பொச்சாவாமை.

அறம்பொருளின் பங்கீர்த்தி ஆயுவெற்றி யானவெல்லாம்
மறந்தாரைச் சேரா மறதிவிடு கண்மணியே. (85)

55. செங்கோன்மை.

குடிதழுவிக் கோலோச்சுங் குற்றமில்லா மன்னவன்றன்
அடிதழுவி வாழுமன்பர் யாருலகெ லாங்கிளியே. (86)
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாங்கி யிறைபுரிந்து
சொன்னவறத் தாற்றொழுகல் தூயசெங்கோ லாங்கிளியே. (87)

56 கொடுங்கோன்மை.

இறைமுறையாற் கொள்வதன்றி ஏக்கமுற யாவரையும்
குறைபடுத்திப் பொருளேற்றல் கோடுதலாங் கண்மணியே. (88)
அல்லற்பட் டாற்று தழுதகண்ணீர் மன்னவன்றன்
செல்வத்தைத் தேய்க்குமொரு திண்படையாங் கண்மணியே. ()

57 வெருவந்த செய்யாமை.

குடிக ணடுங்கச்செய்யும் குற்றத்தின் மிக்கதண்டம்
படிகாக்கும் மன்னவர்க்குப் பாவமாங் கண்மணியே. (90)
இறைகொடிய னென்றுலக மேங்கச்செய் மன்னன்
உறைகுறுகிச் செல்வம் ஒருங்கிழப்பா னுங்கிளியே. (91)

58 கண்ணோட்டம்.

கண்ணோட்டம் யாதெனின்முன் கண்டபயின் றார்க்காணில்
கண்ணோடி யன்னார்க் களிப்பித்த லாங்கிளியே. (92)

காரியங்க ளாய்பொருட்டுக் கண்ணோடி யாவரை
சீரா யுவர்ப்பித்தல் செவ்வியதாங் கண்மணியே. (93)

### 59 ஒற்றாடல்.

எல்லார்க்கு மெய்விடத்து மென்றுநிகழ் சம்பவங்கள்
வல்லறிய வோதுதல் வகையொற்ற லாங்கிளியே. (94)

ஒற்றுட லென்றுமது வொருவருமோ ராதிருந்தால்
உற்ற வினைசெய்வதாக் கூறுதியாங் கண்மணியே. (95)

### 60 ஊக்கமுடைமை.

ஊக்க முடையா ருயர்ச்சியடை வாரவரை
ஆக்கமெலாந் தேடி யடையுமே கண்மணியே. (96)

### 61 மடியின்மை.

கல்லாப் பயனுமிழந் தேங்குவன சோம்பலெனும்
கல்லான் முகடிவெஃகும் நாணமிலான் கண்மணியே. (97)

சோம்பல் துயில்மறதி தூக்கமிவை மிக்குடையான்
தேம்பித் திரிவரெனச் செப்புவார் கண்மணியே. (98)

### 62 ஆள்வினையுடைமை.

முயற்சியுடை யார்களென்றும் முற்றுலக மாளுமாம்
உயர்ச்சியடை வார்களென்று ஓதுவார் ஓவியமே. (99)

தெய்வத்தா லெண்ணுபயன் சேராது போகினுந்தன்
மெய்வருத்தக் கூலிகையின் மேற்கிடைப்ப தாங்கிளியே (100)

### 63 இடுக்கணழியாமை.

தெய்வத்தால் மக்களால் சேர்பொருளி லாமையினால்
எய்து மிடும்பைகளுக் கேங்காதே கண்மணியே (101)

அரசியல் முற்றிற்று.

---

## அங்கவியல்

### 64 அமைச்சு.

எல்லாந் தெரிந்தறிந்தே ஏற்றபடி செய்துறுதி
சொல்லவல்ல மந்திரியே சூழ்ச்சித் துணைகிளியே. (102)

### 65 சொல்வன்மை.

பகைநொதுமல் நண்புசெல்வப் பாலவெலாம் வந்தணையத்
தருமொழிகளைத் தெரிந்து சாற்றுதலாங் கண்மணியே. (103)

### 66 வினைத்தூய்மை.

அறம்பொருளின் பங்க ளாம்வினையைச் செய்தலன்றி
மறம்பயக்குந் தீச்செயல்கள் மன்னாற் கிகழ்கிளியே (104)

நன்றோர் பசியுறினும் இன்னாற் படினுமென்றும்
சான்றோர் பழிவினைகள் சாராராகல லோர்கிளியே. (105)

குடிகளழக் கொண்டபொருள் கோவிரங்கப் போவனவாம்
ஈடுநிலையாற் கொள்ளல் நழுவினும்பின் றெங்கிளியே. (106)

### 67 வினைத்திட்பம்.

அழியும் வினைவிட லும் ஆக்கவினை ஊழால்
பழுதுபடிற் சோகமுறாப் பான்மைதிட்ப மாங்கிளியே. (107)

செய்யும் வினையிடையிற் சிரழியாத் திட்பமொட்பம்
எய்தி முடிய இயற்றுதலாங் கண்மணியே. (108)

### 68 வினைசெயல் வகை.

முடிவுமிடையூறும் முற்றியபின் னத்தொழிலால்
படுபயனுஞ் சீர்தூக்கிப் பார்த்தறிந்து செய்கிளியே. (109)

சாமபே தந்தான தண்டமெனக் கூறுகின்ற
நாமவகை யால்வினையை நன்குறச்செய் வாய்கிளியே. (110)

### 69 தூது.

வேந்தனுரைப் பவற்றை வேற்றரசர் பாற்சென்று
வேந்துவக்கச் சொல்லல் விறற்றூது கண்மணியே. (111)

### 70 மன்னரைச்சேர்ந்தொழுகல்

அகலாதணுகா தனல்காய்வார் போன்றிருந்து
உகப்பாம் பொழுதில் உறுதிசொல்வ தாங்கிளியே. (112)

### 71 குறிப்பறிதல்.

விருப்புவெறுப் புக்காமம் மேற்சோக மச்சமென
கருத்தி னிகழ்வதெலாங் கண்டறிவ தாங்கிளியே. (113)

### 72 அவையறிதல்.

அரச னுடனேயும் அவையினைய ராய்ந்தறிந்து
உரியனவாஞ் சொற்களையே ஓர்ந்துசொல்வ தாங்கிளியே. (114)

### 73 அவையஞ்சாமை.

நல்லவைக்கண் கற்றவற்றை நன்குணரா நாணாது
சொல்லிக் குறைநிரப்பல் தூய்மையாங் கண்மணியே. (115)

பேரவைக்கண் கற்றவற்றைப் பேசியவர் பால்மிகுத்த
சீரவற்றைக் கோடலஞ்சாத் திரமாங் கண்மணியே. (116)

74. நாடு.

குன்றா விளைவும் குறைவிலாப் பாக்கியரும்
பொன்றாத் தவரும் பொலிவதுநா டாங்கிளியே. (117)

ஆற்றுநீர் ஊற்றுநீர் ஆர்மலைநீ ரும்பொருந்தி
வேற்றாரெ லாம்வரினும் மேவுதல்நா டாங்கிளியே. (118)

இராப் பிணியும் செறுபகையு முட்பகையும்
ஆராப் பசியுமிலா தார்வதுநா டாங்கிளியே. (119)

75 அரண்.

பற்றார் புகற்கரிதாய பண்டமெலா முண்ணிறைவாய்
சுற்றுநீர் மண்மலைகான் சூழ்வதர ணாங்கிளியே. (120)

76 பொருள் செயல்வகை.

எல்லாருஞ் செல்வரையே ஏத்துவா ரில்லானை
எல்லாரும் வேண்டா திகழுவார் கண்மணியே. (121)

ஆதலா லப்பொருளை ஆருயிர்க்கு மெய்த்துணையாம்
நீதியா லீட்டி நிலைப்பனசெய் கண்மணியே. (122)

77 படைமாட்சி.

காலனெதிர்வரினும் காய்ந்தெதிர்த்துப் போர்புரிந்து
ஓலமிடச் செய்தல் உயர்படையாங் கண்மணியே. (123)

78 படைச்செருக்கு.

கண்ணெதிரே வேல்வருதல் கண்டுநிமைக் காதமறத்
திண்மை படைச்செருக்காம் தேர்ந்தறிவாய் கண்மணியே. (124)

79 நட்பு.

என்றுமுள் ளன்பாய் இடுக்கண் களைந்துறுதி
ஒன்றும் விடாத்துணையா யோங்குவர்நட் பாங்கிளியே. (125)

நிறைமதிபோ லுளும் நிறைவதுநல் லோருறவாம்
குறைமதிபோற் றீயநட்பு குன்றுவதாங் கண்மணியே. (126)

80 நட்பாராய்தல்

குணமுங் குடிப்பிறப்புங் குற்றமுங்குன் றுதசுற்றத்
துணையுமா ராய்ந்துநட்டல் தூய்மையாங் கண்மணியே: (127)

### 81 பழமை.

தொன்றுதொட்டு நண்பாய்த் தொடர்ந்தோ ரிடைப்பிழைகள்
ளொன்றினும்நட் போம்பல் உயர்பழமை யாங்கிளியே. (128)

### 82 தீநட்பு.

செல்வத்திற் கூடித் திருநீங்கப் போகுநட்பாம்
பொல்லாரைக் கூடுவது புத்தியன்றாங் கண்மணியே. (129)

மனமொன்று செய்கையொன்று வாக்கொன்றாய்க் கூடிநின்று
தனமகல நீங்குநட்பைச் சாராதே கண்மணியே. (130)

### 83 கூடாநட்பு.

கும்பிடுங்கைக் குள்ளும் கொடுவா ளொடுங்குமொன்னார்
வெம்புங்கண் ணீருமதாம் மேவாதே கண்மணியே. (131)

பகைநட்பாக் கொள்ளும் பருவம் வருமாகில்
முகம்நக நட்டகத்தான் முற்றுமொழி கண்மணியே. (132)

### 84 பேதைமை.

கற்றறிந்தும் கறபிந்தும் கற்றநெறி தானடங்காக்
குற்றமுடைப் பேதையரைக் கூடாதே கண்மணியே. (133)

ஏதிலா ரார இனத்தார பசித்துழல்வர்
பேதைபெருஞ் செல்வம பெற்றக்கால் கண்மணியே. (134)

### 85 புல்லறிவாண்மை.

கல்வி பகுகபிலான் கற்றவரைப் போற்செருக்கி
சொல்லுறுதி கொள்ளான் துணிதனக்காங் கண்மணியே. (135)

### 86 இகல.

பகைத்த லெனுங்குணத்தைப் பற்றறநீ விட்டால்
மிகுத்த வறம்பொருளும் மேலின்ப மாங்கிளியே. (136)

### 87 பகைமாட்சி.

அடுத்திருந்து கேடுசெய்யும் ஆர்வமிலா னைப்பகைத்தல்
தொடுத்துக் கொளலுநன்றாங் கூசாதே கோகிலமே. (137)

### 88 பகைத்திறந்தெரிதல்.

பகைத்திறமெல் லாந்தெரிந்து பண்பாக அவ்வவரின்
வன்கக்கிணங்கச் செய்தொழுதல் மாண்பாகுங் கண்மணியே. ()

இயற்கை செயற்கையென வென்னும் பகையிரண்டும்
மயக்க மறத்தெரிந்து வழிப்படுத்து கண்மணியே. (139)

89 உட்பகை.

இனத்துட் பகையிருப்பின் இன்னாத கேடெல்லாம்
புனத்துட் புழுப்போலப் புக்கழிக்கு மாங்கிளியே. (140)

ஆதலா லஃதை அடியோ டறுக்கொழிப்பின்
ஏதமிலாச் செல்வமெலா மெய்தலாங் கண்மணியே. (141)

90 பெரியாரைப் பிழையாமை.

கல்விசெல்வ மாற்றல் கதித்தபெரி யோரையென்றும்
புல்லிப் பணிந்தொழுகல் போற்றுமின்ப மாங்கிளியே. (142)

தவத்திற் பெரியாரைத் தற்செருக்கா லேபிழைத்தார்
பவங்களெல் லாமிழந்து பாழ்படுவார் கண்மணியே. (143)

குன்றனைய மெய்த்தவத்தார் குன்றமதிப் பின்வேந்தும்
பொன்றுவான செல்வமுடன் போற்றுவாய் கண்மணியே. (144)

91 பெண்வழிச்சேறல்.

மனையாளுக் கஞ்சும் மறுமையிலா னெப்பயனும்
தினையளவுங் கொள்ளாத் திறனிலனாங் கண்மணியே. (145)

92 வரைவின் மகளிர்.

அன்பின் விழையார் அருப்பொருளை யேவிரும்பும்
துன்பப் பொதுமகளைத் தோயார்நல் லோர்கிளியே. (146)

ஆக்கமெலாங் கொண்டு அழப்பெருநோ யைக்கொடுத்து
நீக்குதல்செய் வேசியரை மேவார்நல் லோர்கிளியே. (147)

93 கள்ளுண்ணாமை.

ஆக்க மழித்து அறிவூக்கத் தைக்கெடுத்து
தூக்கமிகுங் கள்ளையுண்ணல் துள்ளுநஞ்சாங் கண்மணியே. (148)

94 சூது.

மூன்றுதந்து நூறழிக்கும் ஒப்பிலா வுட்பகையாம்
வென்றிடினுஞ் சூதை விரும்பாதே கண்மணியே. (149)

95 மருந்து.

வாதபித்த சேடம் வகுத்ததத்தம் மாத்திரையின்
பேதம் மிகிற்குறையிற் பிணியுண்டாங் கண்மணியே. (150)

பசித்துப் புசிக்கான் பலபண்டத் தால்நிறைப்பான்
நசித்துப் பிணிபிடித்தெந் நாளுமலை வான்கிளியே. (151)

சிற்றூண் புசிப்பார்க்குச் சேருமின்பம் போற்பெரிதூண்
பெற்றுப் புசிப்பார்க்குப் பீடையுண்டாங் கண்மணியே. (152)

அங்கவியல் முற்றிற்று.

---

## ஒழிபியல்.

### 96 குடிமை.

நகையீகை வாய்மையின்சொல் நாண்பண்பு நீமானம்
இகழாமை யாங்குணங்க ளிற்பிறந்தார்க் காங்கிளியே. (153)

### 97 மானம்.

தன்னிலையிற் றாழாமை தாழ்வுவரிற் றெய்வத்தால்
தன்னுயிரைத் தான்விடுதல் தான்மானங் கண்மணியே. (154)

### 98 பெருமை.

அறிவொழுக்க மாண்மைபணி வாதிநலம் யாவும்
செறிபெருமை யார்தக்கோர் தேர்ந்தறிவாய் கண்மணியே. (155)

பொறுமைபுறங் கூறாமை பொய்யாமை அன்புகொண்டு
சிறுமையெலாம் நீத்த திறம்பெருமை யாங்கிளியே. (156)

### 99 சான்றாண்மை.

அன்புநா ணொப்புரவு ஆனகண்ணோட் டம்பணிதல்
இன்பமிகும் வாய்மைபொறை ஈதல்சால் பாங்கிளியே. (157)

### 100 பண்புடைமை.

எல்லார் குணமுமறிந் தேற்றபடி யவ்வவர்க்குப்
பொல்லாப்பில் லாதொழுதல் போற்றுபண்பாம் பொற்கிளியே.

### 101 நன்றியில் செல்வம்.

உண்ணான் தமர்க்குதவான் ஒங்குமறஞ் செய்யானாய்
மண்ணுவான் கோடிபெற்றும் மாவறிய னாங்கிளியே. (159)

சுற்றத்தி லன்பைவிட்டுத் துய்த்தலறஞ் செய்கைவிட்டு
பெற்றசெல்வம் யாவும் பிறர்கொள்வார் கண்மணியே. (160)

102 நாண்.

பெருமைசான் றாண்மைகளிற் பேசாச் சிறுச்செயலை
ஒருபொழுதுஞ் செய்யாமை ஒதுநாண் பைங்கிளியே. (161)

103 குடிசெயல்வகை.

தங்குடியைத் தாழாது தாங்கியுயர்த் தல்யார்க்கும்
பொங்குபுக ழாண்மையெனப் போற்றுவார் கண்மணியே. (162)

104 உழவு.

உழுதொழிலே யார்க்கும் உயர்வாம் அதுவுமன்றி
தொழுதொழிலார் தம்பசியைத் தீர்க்குமருந் தாங்கிளியே. (163)

105 நல்குரவு.

ஒன்றுமில் லாவறுமை ஒன்றுமேல் யாவருக்கும்
என்றுமிலாத் துன்பமெலாம் ஈண்டுமே கண்மணியே. (164)

நெருப்பினிற் றுஞ்சுதலும் நேருமணி மந்திரத்தால்
நிரப்பிற் றுயிலலென்றும் நேராதாங் கண்மணியே. (165)

106 இரவு.

இரப்பதுவு மீதலொக்கு மில்லையென்னார் தம்மை
கரப்பதிலாப் பெரியோரைக் காண்பதரி தாங்கிளியே. (166)

107 இரவச்சம்.

கரவா துவந்தளிக்கும் கண்ணன்னார் கண்ணும்
இரவா துயிரோம்பல் இன்பமாங் கண்மணியே. (167)

108 கயமை.

கரும்புமென் றும்போலக் கயவர் கசக்கினர்க்கே
விரும்பியவை யெல்லாம் விரைந்தளிப்பார் கண்மணியே. (168)

ஒழிபியல் முற்றிற்று.

---

## காமத்துப்பால்.

### களவியல்

காதலனும் காதலியும் காதலொத்துக் கூடியயல்
ஒதுமின்றேன் றீயவற்றை ஓர்ந்துணர்வாய் கண்மணியே. (169)

109 தகையணங்குறுத்தல்

தெய்வமக ளோவேறோர் தேயத்து வாழ்மயிலோ
பெய்வளைபூ மாதரோ பேசவறி யேன்கிளியே. (170)

உண்டாற் களிக்கும் உலகி லடுநறவம்
கண்டாற் களிப்பதில்லைக் காமம்போற் கண்மணியே. (171)

110 குறிப்பறிதல்.

இத்தகையாள் நோக்கம் இருநோக்கு நோக்குதலால்
ஒத்த குறிப்பாய் உயிர்க்கமிர்த மாங்கிளியே. (172)

111 புணர்ச்சிமகிழ்தல்

உண்டுயிர்த்துக் கண்டுகேட் டுற்றறியு மைம்புலனிப்
பெண்டிடத்தா யென்னுயிர்க்குப் பேரின்ப மாங்கிளியே. (173)

112 நலம்புனைந்துரைத்தல்

நிறைமதிக்கண் ணேகளங்கம் நிற்பதுபோல் யான்விரும்பும்
பிறைநுதற்குண் டோமுகத்திற் பேசாய்நீ பைங்கிளியே. (174)

113 காதற்சிறப்புரைத்தல்.

நினைப்பேன் மறந்தனுண்டேல் நேரிழையே நின்னை
எனைத்து மறந்திலனால் எண்ணிலேன் கண்மணியே. (175)

கண்ணுள்ளோ ளென்றும் கலந்துநிற்குங் காதலரை
எண்ணும் வகையறியேன் எதுசெய்வேன் கண்மணியே. (176)

114 நாணுத்துறவுரைத்தல்.

காம நுகர்ந்தகன்ற காதலுழந் தார்க்கென்றும்
ஏமம் மடலவதிங் கேதுவலி கண்மணியே. (177)

காதலரைக் காணாக் கவலையால் நாண்டுறந்து
பாதையெங்குஞ் செல்லுமலர் பாராய்நீ பைங்கிளியே. (178)

115 அலரறிவுறுத்தல்.

அலர்கூறிக் காதல் அளிக்குமென்னில் நீயளிக்க
பலர்கூடி நெய்சொரியும் பான்மையாங் கண்மணியே. (179)

களவியல் முற்றிற்று.

## கற்பியல்.

### 116. பிரிவாற்றாமை.

பிரியே னெனப்படுஞ்சொல் பேசுகநீர் விட்டகன்று
வருவே னெனச்சொலல்பின் வாழ்வார்க் குரைகிளியே. (180)

### 117 படர்மெலிந்திரங்கல்

இறைக்குந்தோ றும்பெருகும் ஏர்மடுப்போற் காதல்
மறைக்குந்தோ றும்பெருகு மார்க்கமாங் கண்மணியே. (181)

### 118 கண்விதுப்பழிதல்.

கடலிற் பெரிதான காதலைத் தந்தகண்கள்
படலாற்றாத் துன்பமெய்தி பாடழியுங் கண்மணியே. (182)

காணாப்போ துந்துயிலாய்க் கண்டபோ துந்துயிலாய்
வீணா விதுப்பழிதல் மேல்வினைகொல் கண்மணியே. (183)

### 119 பசப்புறுபருவரல்.

என்னழுகும் நாளும் எடுந்தினியார் கைமாறு
மின்னும் பசப்பு விரைந்தளித்தார் கண்மணியே. (184)

### 120. தனிப்படர்மிகுதி.

நாங்காதல் கொண்டழுந்தும் நாயகரெம் மேற்காதல்
தாங்கொண் டழுந்திலரேல் சார்பயனென் னேகிளியே, (185)

### 121 நினைந்தவர் புலம்பல்.

உண்டாற் களிப்பதன்றி ஒண்காமம் போல்நறவம்
கண்டால் நினைத்தால் களிப்பதின்றாங் கண்மணியே. (186)

தந்நெஞ்சுள் நாமிருக்கத் தாங்காதார் நாணார்கொல்
எந்நெஞ்சத் தோவா திருப்பதற்குக் கண்மணியே. (187)

### 122 கனவுநிலையுரைத்தல்.

நனவெனவோர் பாவி நணுகாதேல் நம்மிடத்தில்
கனவிலென்றும் வந்தணைவார் காதலர்காண் கண்மணியே. (188)

### 123 பொழுதுகண்டிரங்கல்.

காலை யரும்பாய்க் கடும்பகலெல் லாம்போதாய்
மாலை மலருமிந்நோய் மாதுயரங் கண்மணியே. (189)

## 124. உறுப்புநலனழிதல்.

நயந்தவர்நல் காமை நவிலுதல்போற் கண்ணிரண்டும்
அயர்ந்துநீர் மல்குகின்ற துன்பமாங் கண்மணியே. (190)

## 125 நெஞ்சொடுகிளத்தல்.

நெஞ்சேநோய் தீர நினைத்தோர் மருந்தென்க்கு
அஞ்சலென்று சொல்லியெனை ஆற்றாயோ கண்மணியே (191)

காதலரெம் முள்ளங் கலந்திருக்க நீபுறத்தே
போதலென்ன நெஞ்சேயுன் புன்மையொழி கண்மணியே. (192)

## 126 நிறையழிதல்.

நாணத்தாள் பூட்டும் நமது நிறைக்கதவை
காணக் கனிச்சியெனும் காமமுடைக் குங்கிளியே. (193)

## 127 அவர்வயின் விதும்பல்.

கண்ணாரக் காதலரைக் காண்கநான் கண்டபின்பு
எண்ணாது நீங்குமென்றோ ளெய்துபசப் புக்கிளியே. (194)

ஊடுவனோ கூடுவனோ ஊடலுடன் கூடுதலை
நாடுவனோ கண்ணனைய நாயகர்வந் தாற்கிளியே. (195)

வினைகலந்து வென்றீக வேந்தன்யான் வெஃகும்
மனைகலந்தி வோம்விருந்து மாலைக்கு மாங்குயிலே. (198)

## 128 குறிப்பறிவுறுத்தல்.

மணிகோத்த நூல்விளங்கு மாறுபோ லெம்மடந்தை
அணிகோத் தொளிர்குறிப்பொன் றுண்டாங் கண்மணியே.(197)

நெருநற்றுச் சென்றாரெந் நேசத் தலைவரென
உருவில் பசப்பெம்மை யுற்றுநா ளேழ்கிளியே. (198)

தொடிநோக்கிப் பின்புதன் றோணோக்கி மென்மையவாம்
அடிநோக்கிச் செய்குறிப்பொன் றுண்டுளதாங் கண்மணியே. ()

## 129. புணர்ச்சிவிதும்பல்.

ஊடநினைத் தேன்றோழி ஒண்டலைவர்க் கண்டவுடன்
கூடுதலை யன்றிநெஞ்சங் கொண்டிடலதென்றுங் கிளியே (200)

மலரினும் மெல்லியதாம் மால்காமம் மாந்தர்
சிலர்மாத் திரமதன் செவ்விபெறு வார்கிளியே. (201)

கெட்டாரை நட்டலிரன் றென்னெஞ்சே வன்றிநெஞ்சே
கெட்டார்பின் செல்லல் வெகுளிரேசொல் பைங்கிளியே. (202)

காணுப் பொழுதுமஞ்சும் கண்டாற் பிரிவை யஞ்சும
பாணு விடும்பைதந்தென் மாயுநெஞ்சு கண்மணியே. (203)

அன்பத்துக் காரே துணையாவர் நம்முடைய
அன்புக் குரியநெஞ்சம் ஆகாக்காற் கண்மணியே. (204)

## 131 புலவி

அலந்தார்க்கு மேலு மலைவுசெய லொக்கும
புலந்தா ரயர்ந்திப் புல்லாமை கண்மணியே. ( )

நோதலின் லெனனபயன் னொந்தா ரெனத்தெரியும
காதலி யிலரேல கடுந்துயரா கண்மணியே )

## 132 புலவிநுணுக்கம.

பெண்ணியலார் கண்ணாற் பெரிதுண்டா ருன்னலத்தை
கண்ணேன் பரத்தவுன்றன் நன்மார்பை நான்கிளியே (207)

நின்னையகல் ஞான்றில நீடுநினைந் தேனெனவும
என்னை மறந்தீ ரெனப்புலந்தாள் கண்மணியே (208)

## 133 ஊடலுவகை.

காதலரிற் குற்றமொன றும காண்கிலே மாகுனும
நோத லவரளிக்கு நண்டுணையாங் கண்மணியே. (209)

ஊடுதல்கா மத்துக் குறுமின்ப மாமதற்கு
கூடி முயங்கல் குறைவிலின்ப மாங்கிளியே. (210)

## வாழ்த்து.

மன்றமுதல் வாழ்க வையம் வான்மழை பொழிந்து வாழ்க
இறைநலம் வாழ்க அன்று னேர்ந்துசெங் கோலும் வாழ்க
அறைதரு முயிர்கள் வாழ்க அருட்குரு பாதம் வாழ்க
குறையல பகறி பெண்சொற் குணாகரன் சொன்னோர் வாழ்க.

கண்மணித் தாலாட்டு முற்றும்.